DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 94/2022
Miscellaneous :
Sessions : DW 1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மனோமேஷாக் |
| Father Name | ராஜாசாலமன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02/09/2023

**குறுக்கு விசாரணை**

1.) சேலையூர் ஔவை தெரு JVC அப்ட்மன்டில் எவ்வளவு காலமாக வசித்து வருகிறேன் என்றால் 2019 ல் இருந்து வசித்து வருகிறேன். தாம்பரத்தில் உள்ள கார்லி மேல்நிலை பள்ளியில் ஆசிரியராக 2016 ல் இருந்து பணிபுரிந்து வருகிறேன். ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 2016 க்கு முன்பு சந்தோஷ் கல்லூரியில் பேரராசிரியராக பணிபுரிந்தேன். புகார்தாரர் பெருமாளை சுமார் 10 வருடங்களாக எனக்கு தெரியும். பெருமாள் வீட்டில் நடக்கும் சுபநிகழ்ச்சிகளுக்கு சென்று வருவேன். வழக்கின் காசோலை எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வழக்கு காசோலை என்னுடையது தான். வழக்கு காசோலை எண்.033787 என்ற காசோலை புகார்தாருக்கு எவ்வாறு சென்றது என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. படித்த ஆங்கில ஆசிரியர் தனது காசோலை எவ்வாறு புகார்தாரரிடம் சென்றது என்று தெரியாது என்று கூறுவது ஏற்கும் வகையில் இல்லை என்றால் சரியல்ல.

2. நான் ஸ்டேட் பேங்கில் 10 வருடங்களாக கணக்கு வைத்துள்ளேன். எனது முதன்மை வாக்குமூலத்தில் எனது அண்ணன் குருசாத்ரா மூலம் புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லி இருப்பது பொய்யனதா என்றால் அது தான் உண்மை. சற்று முன்னர் வழக்கு காசோலை புகார்தாரரிடம் எவ்வாறு சென்றது என்று நான் கூறியது உண்மை இல்லை. காசோலை திரும்பி பிறகு வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பட்டது என்றால் இல்லை. Uncliamed என்ற வார்த்தையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மதுராந்தகம் இளங்கோ தெருவில் 2012 ல் இருந்து 2019 வரை இருந்தேன். கதவு எண்.2 ல் வசித்தேன். அறிவிப்பு கதவு எண்.5 ற்கு அனுப்பபட்டுள்ளது.

3. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் புகாரில் சொல்லப்பட்டுள்ள முகவரியில்

வசிக்கவில்லை என்று விவரம் சொல்லியிருக்கிறேன் சரிதான். பொதுவாக ஒரு நபர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்றால் Left என்று வரும் என்றாலும் Unclaimed என்று தபால் திருப்பபடாது என்றால் இப்போது தான் தெரியும். எனது அப்பா 2016 ஜனவரி 1 ம் தேதி இறந்துவிட்டார். எனது அப்பா இறந்த போது இளங்கோ தெருவில் வசித்து வந்தேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பட்ட அழைப்பாணை மதுராந்தகம் இளங்கோ தெருவிற்கு அனுப்பட்ட விவரம் எனக்கு தெரியும். தற்போது இளங்கோ தெருவில் எனது அம்மாவும் சித்தியும் இருக்கிறார்கள். எனது அம்மா சித்தி ஆகியோர் புகார்தாரர் பெருமாளிடம் பணம் வரவு செலவு வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. எனது அண்ணன் வரவு செலவு வைத்திருப்பது தெரியும். எனது சித்தி பெயர் சமாதானம் ஆகும். எனது சித்தி மற்றும் எனது அண்ணன் மீது வழக்கு நடக்கிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது மனைவி சக்திஸ்வரி லோயோலா மெட்ரிக்பள்ளியில் பணிபுரிந்து வருகிறார். நான் பாண்டு எழுதி கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. என்னுடன் பணிபுரிந்த ஆசிரியர் வரதன் என்பவர் எனக்கும் எனது அண்ணனுக்கும் நண்பர் ஆவார். அவருக்கு எதிராகவும் புகார்தாரர் பெருமாள் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு நானும் எனது அண்ணனும் எனது சித்தியும் புகார்தாரரும் பணம் கொடுப்பதாக சமாதானம் பேசினோம் என்றாலும் தற்போது வழக்கிற்காக வழக்கறிஞர் அறிவிப்பு வந்த விவரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. சமரசம் பேசும் போது வழக்கு காசோலையை நான் கேட்டேன் என்றாலும் லோன் வாங்கி பணம் கொடுப்பதாக சொன்னேன் என்றாலும் காசோலையை என்னிடம் தராததால் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை பொறுப்பிற்காக எந்த வருடம் எனது அண்ணனிடம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. உண்மையில் காசோலை பொறுப்பிற்காக கொடுக்கப்பட்டு இருந்தால் தேதி மாதம் வருடம் முதன்மை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. முதன்மை வாக்குமூலத்தில் பாண்டை திருப்பி பெற்று கொண்டதாக சொல்லி இருக்கிறேன். அது யாருடைய பாண்டு என்று கூறவில்லை. எனது காசோலையை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்த விவரம் எனது அண்ணன் சொல்லி தெரியும் என்று எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேன்.

6. எனது அண்ணன் எந்த தேதியில் அந்த விவரத்தை சொல்லினார் என்றால் தேதி ஞாபகமில்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் 6 மாதங்கள் கழித்து தான் தெரியும். நீதிமன்றத்திற்கு முதன்முதலில் எந்த தேதியில் ஆஜரானேன் என்றால் இன்றைய தேதியில் இருந்து 6 மாதத்திற்கு முன்பு ஆஜரானேன். நான் யாருக்கு பாண்டு எழுதி கொடுத்தேன் என்றால் எனது அண்ணன் எழுதி கொடுத்த பாண்டிற்கு சாட்சி கையொப்பம் போட்டேன். முதன்மை வாக்குமூலத்தில் நான் பாண்டிற்கு சாட்சி கையொப்பம் செய்ததாக கூறவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் செய்த பாண்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாரா என்றால் எனது அண்ணனிடம் கேட்டு சொல்கிறேன். எந்த தேதியில் புகார்தாரர் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டார் என்றால் ஞாபகமில்லை.

7. புகார்தாரர் என்னை தொடர்பு கொண்ட தொலைபேசி சொல்லமுடியுமா என்றால் தெரியாது. எனது தொலைபேசி எண் 9790405437 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டார். 20 நிமிடங்கள் என்னிடம் பேசினார். எனது வழக்கறிஞர் மூலம் வழக்கு விவரம் தெரிந்து கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதாக முதன்மை வாக்குமூலத்தில் சொல்லி இருப்பது தான் உண்மை எனது அண்ணன் மூலம் தெரிந்து கொண்டதாக  சொல்லிருப்பது தவறு. நான் நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முராணாக சாட்சியம் அளித்திருப்பதாக சொல்லி இருப்பது தவறு. வழக்கு காசோலையை போலியாக கையொப்பம் செய்யப்பட்டு இருப்பதாக எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். எனது வழக்கறிஞர் பெயர் தயாளன். எனது பெயரில் வழக்கு இருப்பதாக வழக்கறிஞர் எப்போது தெரிவித்தார் என்றால் தேதி ஞாபகமில்லை.